அசல் வழக்கு எண்.400/2021 வா.சா.1 வெங்கடேசன் த/பெ கிருஷ்ணன்

**<u>23.10.2024 - 1 முதல் 3ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. 1ம் பிரதிவாதியின் கணவர் அண்ணாமலையை எனக்கு எத்தனை காலங்களாக தெரியும் என்றால் 11 வருடங்களாக தெரியும். தற்போது அண்ணாமலை உயிருடன் இல்லைஎன்றால் சரிதான். அண்ணாமலை தற்கொலை செய்து கொண்டார். அண்ணாமலை தற்கொலை செய்து கொள்ளும்போது அதன்காரணம் குறித்து ஒருகடிதம் எழுதிவைத்திருந்தார் என்றால்அதுபற்றி எனக்கு தெரியாது.

2. அவ்வாறு அண்ணாமலை எழுதிவைத்த கடிதத்தின் அடிப்படையில் என்னுடன் சேர்த்து பலர் பெயரில் முதல் தகவல் அறிக்கை வளத்தி காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த வழக்கில் நான் கைது செய்யப்பட்டு சிறைக்கு சென்றேன் என்றால் சரிதான்.

(1 முதல் 3 பிரதிவாதிகள் வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்குவிசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.)